முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1303

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.04.2023, திங்கட்கிழமை

1. ஞானசக்தியாய் வாழும் அரங்கா
ஞானிகள் பலம் கொண்ட ஞானதேசிகா
வானவர்கள் போற்றும் வள்ளலே ஆறுமுக அரங்கனே
வையகத்தில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 11 ம் நாள், 24.04.2023 திங்கட்கிழமை)
உலகமெல்லாம் அரங்கன் புகழ்
உயரவளர வானவர்கள் போற்றி வழிநடத்துகின்ற
வல்லமைமிக்க குடிலாம் அரங்கன் குடிலும் சிறப்புகாண
3. காணவே ஞான அறிவுரை ஆசி
கந்தவேலன் யான் அரங்கனுக்கு தொடர்ந்துரைப்பேன்
உரைக்கவே அரங்கன் சக்தி உலகமெல்லாம் பரவி
உயர்வான ஞானலோகமாக இந்த கலியுகம் சடுதி மாற்றங்காணும்
4. காணவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
கருணைமிக்க அரங்கன் தொடர்பில்தான் உலகோரெல்லாம் ஞானிகளாகி
பெருமைமிக்க ஞானஉலகம் ஞான ஆட்சிதனையும் படைத்து
பேருலகில் சர்வ பலம் பெறுவர்
5. பலம் தருகின்ற அரங்கனே கலித்துன்பங்களை எல்லாம் விரட்டி
பாதுகாப்பும் மக்களுக்கு சர்வபலமும் தந்தருளும் தவசியாகும்
தவசியரின் தர்மவழியும் சன்மார்க்க நெறியும்
தலையாய வேதமாக ஏற்று
6. உலகோர் தொடர்ந்து வர இந்த
உலகம் ஞான லோகமாகி
உயர்வான ஞானிகள் ஆட்சிக்காலமாக
மாறி அற்புதம் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–